ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

**අංක 2449/70 - 2025 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2025.08.15**

**2449/70 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2012, திசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 1789/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 316 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித் தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**கே.டி லால் காந்த,**
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/10/2012/LRB/12.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: WGSWD&EIP/ACQ/MH/02.
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, யூலை 24.

1A - G45149 - 09(2025/08)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 526/B கங்கொடவில தெற்கு B கிராம அலுவலர் பிரிவுகளில், கங்கொடவில (பிரிவு இல. 25 - கங்கொடவில தெற்கு, மஹரகம நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2025.04.08 ஆம் திகதிய CO/DSO/2025/14 வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு ‘B’ – கண்டுபிடிக்க முடியவில்லை - விஸ்தீரணம்: 0.0081 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு A; கிழக்கு: துண்டு C, ஆ.வ. 3582 இல் துண்டு F7 மற்றும் ஆ. வ. 10197 இல் துண்டு இல. 7413; தெற்கு: ஆ. வ. 10197 இல் துண்டு இல. 7413 மற்றும் ஆ. வ. 9572 இல் துண்டு இல. 27; மேற்கு: ஆ. வ. 9572 இல் துண்டு இல. 27 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு A.

02. **துண்டு ‘C’ – கண்டுபிடிக்க முடியவில்லை - விஸ்தீரணம்: 0.0006 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு B, A மற்றும் ஸ்ரீ லால் ஹிக்கடுவ லியனகே மாவத்தை; கிழக்கு: ஸ்ரீ லால் ஹிக்கடுவ லியனகே மாவத்தை மற்றும் ஆ. வ. 3582 இல் துண்டு F7; தெற்கு: ஆ. வ. 3582 இல் துண்டு F7; மேற்கு: துண்டு B மற்றும் A.

EOG 08-0180